# <u>செய்தி வெளியீடு</u> எண் 693

தேதி : 16.08.2010

## "மாடித் தோட்டம் அமைத்தல்"

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சென்னை நகர்ப்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மையத்தில் **"மாடித் தோட்டம் அமைத்தல்"** பற்றிய ஒரு நாள் பயிற்சி ஆக ஸ்ட் மாதம் **19ஆம் நாள் (19.08.2010)** வியாழக் கிழமை நடைபெறவுள்ளது,

வீட்டின் பின் பகுதியில் உள்ள காலி இடங்கள் குறைவாகவோ அல்லது இடப் பற்றாக்குறையின் போது, வீட்டிலுள்ள மாடிப்பகுதியில் காய்கறி மற்றும் மூலிகைப் பயிர்களை வளர்ப்பதனால் வீட்டின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வருட முழுவதும் வீட்டிற்கு தேவையான பழம், காய்கறிகள் கிடைப்பதுடன் சிறு சிறு உடல் உபாதைகளை தவிர்த்து வீட்டு வைத்தியம் செய்யவும் பயன்படுகிறது. நகராட்சி மற்றும் கிராம பகுதிகளுக்கு மட்டுமல்லாது, அனைத்து குடும்பத்தினர்களும் எளிய முறையில் மாடித் தோட்டம் அமைத்து பராமரிக்க இப்பயிற்சியானது மிகவும் அவசியம். **<u>ஆகஸ்டு</u> மாதத்தில் மாடித் தோட்டம் அமைக்க, செடிகள் நடவு செய்ய ஏற்ற பருவமாகும். எனவே இப்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் முறையான தோட்டம் அமைத்து செடிகளை பராமரித்து பயன் அடைய முடியும்.**

இப்பயிற்சியானது வீட்டிலிருப்போர் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும். பயிற்சியில் கலந்துக் கொள்ள விருப்பமுள்ளவர்கள், பயிற்சி பற்றிய தகவல்கள் மற்றும் பயிற்சி கட்டணத்தை கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


**பேராசிரியர் மற்றும் தலைவர்**
நகர்புற தோட்டக்கலை வளர்ச்சி மையம்
புதிய எண் -44. ஆறாவது அவென்யூ.
அண்ணாநகர். (கே-4 காவல் நிலையம் அருகில்)
சென்னை 600 040.
தொலை பேசி எண் - 26263484 / 42170506.


வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
சென்னை-9

முப. சாந்தி பாலசுப்பிரமணியன்
16.8.10
**பேராசிரியர் மற்றும் தலைவர்**

பேராசிரியர் & தலைவர்
நகர்புற தே... ...ச்சி மையம்
தமிழ்நாடு ... பல்கலைக் கழகம்,
... சென்னை 600 040.